Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

(17)

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு. கி.சண்முகம், எம்.இ.,எம்.பி.ஏ.,
துணை இயக்குநர் (பொ),
கிருஷ்ணகிரி மாவட்ட
நகர் ஊரமைப்பு அலுவலகம்,
25/2 நேதாஜி ரோடு, ஓசூர் – 635 109.
E-Mail : krishnagiri.district2020@gmail.com
Web : www.tn.gov.in/dtcp
Phone : 04344 – 222 563.

பெறுநர்
தலைவர்/ தனி அலுவலர்,
பில்லனகுப்பம் ஊராட்சி,
கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் .

ந.க. எண்.2156 /2021/கிமா நாள்:22.04.2021.

ஐயா,

பொருள் : தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் – கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் – கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி வட்டம் – கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் – பல்லனகுப்பம் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்.599/1–ல் 27000 ச.மீ பரப்பளவுள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு க.வ/ந.ஊ.து(தம) எண்.33A, 33B, 33C/2019 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது – அம்மனையிடத்தில் நிலையில் கட்டப்பட்டுள்ள Phase I தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்துடன் தற்போது கூடுதலாக Phase II தரைதளம் + மூன்று தளங்களுடன் 144 குடியிருப்புகள் கொண்ட 5312.64 ச.மீ கட்டுமான பரப்பில் அமையவுள்ள கூடுதல் தொகுப்பு குடியிருப்பு கட்டுமான வரைபடங்களுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2667/2019தம, நாள்.02.12.2019.
2. மனுதாரர்: நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், வேலூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.137, உ.பொ(தி)/வே.கோ/2021, நாள்.26.03.2021.
3. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் (Centage Charge) நாள்.29.03.2021.
4. மனுதாரரிடம் நன்னிலைவரி செலுத்தி பெறப்பட்ட நாள்.19.04.2021.
5. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யு.டி.4.2), நாள் 04.06.2004.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.

பார்வை (1)–இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம் அவர்களின் கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பல்லனகுப்பம் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண். 599/1–ல் 27000 ச.மீ பரப்பளவுள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கொண்ட தொகுப்பு கட்டிட மனைக்கு <u>A to R</u> என எல்லையிட்டு மனை வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(தம) எண்.141/2019 என எண்ணிடட்டு மனை ஒப்புதலும், அம்மனையில், 19703.76 ச.மீ பரப்பளவில் அமையும் 528 வீடுகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு <u>க.வ/ந.ஊ.து(தம) எண்.33A, 33B, 33C/2019</u> என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

..2..

மேலும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம் அவர்களால் ஒப்புதலளிக்கப்பட்ட மனைபிடத்தில் கூடுதலாக அமையவுள்ள Phase II தரைதளம் + மூன்று தளங்களுடன் 144 குடியிருப்புகள் கொண்ட 5312.64 ச.மீ பரப்பில் அமையும் கூடுதல் தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு <u>க.வ/ந.ஊ.து.இ(கிமா) எண்.32A, 32B/2021</u> என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. கட்டுமான விவரம் கீழ்கண்டவாறு,

Type -C Block N to P (12 in 1)	Area	No. of Dwellings
Ground Floor	442.72 Sq.m	48
First Floor	442.72 Sq.m	
Second Floor	442.72 Sq.m	
Third Floor	442.72 Sq.m	
Total	1770.88 Sq.m	

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டிடத்தில் Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டு எப்போதும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நீ.1) துறை நாள்.03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
10. இக்கட்டிடத்தில் அவசரகால வெளியேறும் வழிகள் பொது கட்டிட விதிகளின்படி அமைக்கப்பட வேண்டும்.
11. இக்கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரும் சம்பந்தப்பட்ட பொறியாளரும் முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
12. அரசாணை எண்.113 நகராட்சி நரிவாகம் மற்றும் குடிநீர் வழங்கலதுறை நாள்.14.12.2012–ன்படி உத்தேச கட்டுமானத்தில் கண்காணப்பு (CCTV) கேமரா பொருத்தப்பட வேண்டும்.
13. கட்டுமானத்திற்கு non -combustible material பயன்படுத்தப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனை</u>

"நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப ஒப்புதல் / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் அரசாணை செயல்துறை ஆணைகள்) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது". அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

பார்வை (6)–இல் காணும் அரசாணை எண்.18 விதி 41(b)-ன்படி வரைபடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள OSR பகுதியினை உள்ளாட்சி தானமாக பெற்று உள்ளாட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனை</u>

The Order is passed subject to the outcome of the writ petition WP (MD) No.8948 of 2019.

மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச்சான்று அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(sd) 22/4/21

துணை இயக்குநர் (பொ),
கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு
அலுவலகம், ஒசூர்.

<u>இணைப்பு</u>
வரைபடங்கள் – 2 தொகுப்புகள் மட்டும்.

22/4/2021 22/4/2021

<u>நகல்</u>
நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
வேலூர் கோட்டம்,
வேலூர் – 632 006.

(sd)
EXECUTIVE ENGINEER
TNSCB / Vellore Division

வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம் பில்லனகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.பி.சிவராஜ்

ந.க.எண்: 01/2021-2022 நாள்:11.06.2020

பொருள்: நீல வரைபட ஒப்புதல் - பில்லனகுப்பம் ஊராட்சி - கே.திப்பனப்பள்ளி கிராம சர்வே எண்:599/1-ல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம் அமைய உள்ள கட்டுமானத்திற்கு, 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கட்டிக்கொள்ள நீல வரைபடம் அங்கீகாரம் மற்றும் அனுமதி வழங்கப்பட்டு தற்போது phase –II தரை தளம் + மூன்று தளங்களுடன் 144 வீடுகள் கட்டிக்கொள்ள நீல வரைபடம் மற்றும் அனுமதி அளித்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்:2667/2019தம, நாள்:02.12.2019.
2.மனுதாரர்: நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியம், வேலூர் கோட்டம் அவர்களின் கடித ந.க.எண்:137, உ.பொ.(தி)/வே.கோ/2021, நாள்:26.03.2021.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் (Centage Charge) நாள்:29.03.2021.
4. மனுதாரரிடம் நன்னிலைவரி செலுத்தி பெறப்பட்ட நாள்:19.04.2021.
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யு.டி.4.2), நாள்:04.06.2004.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019.
7.ஆர்.முருகன், ஊராட்சி செயலாளர், பில்லனகுப்பம் ஊராட்சி ஆய்வு அறிக்கை நாள்:02.06.2021.
8. ஊராட்சி தீர்மான எண்:03/2021-2022, நாள்:03.06.2021.

****

உத்திரவு:

வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, கே. திப்பனப்பள்ளி கிராமத்தில் சர்வே எண்:599/1-ல், 5312.64 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள மனையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம், Phase II தரைத்தளம்+மூன்று தளங்களுடன் 144 வீடுகள் கொண்ட கட்டுமானத்திற்கு, கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நீல வரைபட அங்கீகாரம் மற்றும் அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) இந்த நீல வரைபட அனுமதி 11.06.2021 தேதியில் அனுமதிக்கப்பட்டு 10.06.2022 தேதி வரை அமலில் இருக்கும்.
2) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படிதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மேற்படி வரைபடங்கள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் இது சம்மந்தமான அலுவலர்கள் பார்வையிடும்படி பிரேம் போட்டு வைக்கவேண்டும்.
3) வரைபடத்தில் உள்ள அளவுகள் அல்லாமல் மாற்றி தன் சௌகரியப்படி கட்டிடம் கண்டிப்பாக கட்டக்கூடாது. அவ்வாறு கட்டிடம் கட்டுவது தெரியவந்தால் நீல வரைபட அனுமதி எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
4) கட்டப்போகும் கட்டிடத்தில் வேறு எவ்விதமான விஸ்தரிப்போ அல்லது கூடுதல் கட்டுமானம் செய்ய நேரிட்டால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று கட்டிடம் ஆரம்பிக்க வேண்டும்.
5) வாசற்படிகள், ஜன்னல்கள், வெண்டிலேட்டர்கள், கைப்பிடிகள் மற்றும் பால்கனி முதலியவைகள் சொந்த நிலத்தில் எல்லைக்கு உட்பட்டு இருக்கவேண்டும். ஊராட்சி அல்லது அரசினர் இடத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லாமல், தெருவில் இருந்து நான்கடி உட்பக்கத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

6) சமையலறையில் புகை வெளியே போக சரியான வசதியான புகைக்கூண்டு தடுத்து கட்ட வேண்டும்.

7) சாதாரணமான முறையில் செப்டிக் டேங்க் கழிவறை ஆகிய வசதிகள் கட்டிடப் பொறியாளரின் சரியான அளவுகள் படியும் கட்ட வேண்டும்.

8) செப்டிக் டேங்கில் உள்ள கழிவுநீர் பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு ஏற்படா வண்ணம் கட்டப்பட வேண்டும்.

9) காற்று வசதிக்கு உண்டான ஜன்னல் வெண்டிலேட்டர் போதிய அளவு அமைக்க வேண்டும்.

10) மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஊராட்சிக்கு வரிவிதிப்பிற்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலைகள் முடிக்காவிட்டால் மீண்டும் விண்ணப்பித்து மறு உத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி மறு உத்திர பெறாமல் எந்த ஒரு விதமான கட்டிட வேலையும் செய்யக் கூடாது.

11) கட்டிடத்தை சுற்றி பலன் தரும் செடிகள் வைக்கப்பட வேண்டும்.

12) மழைநீர் சேகரிப்பு தொட்டி 1 மீட்டர் ஆழம் மண்வேலை செய்து இதில் செங்கற்களைக் கொண்டு மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டி தொட்டினுல் மணல் 1 அடி கனம் மற்றும் 20 மி.மீ. அளவுள்ள செங்கல் 1 அடி கனம் நிரப்பு வைக்கவேண்டும்.

13) மேற்படி கூறியுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கட்டிடத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வேறு காரியத்திற்கு எதுவும் பயன்படுத்தக்கூடாது.

14) பார்வை 2-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர் கடிதத்தின் படி பணி நடைபெறும் இடத்தில் உள்ள அங்கிகரிக்கப்பட்ட நீலவரை படத்தில் அமைந்துள்ள OSR நிலத்தினை (5312.64 ச.மீ) தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்திலிருந்து ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு தானப் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 30.08.2021-க்குள் OSR நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும். இல்லை எனில் இந்த உத்திரவு இரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

15) மேலும் தொழிலாளர் பங்கு தொகையை பணிகள் முடிந்தவுடன் மொத்த செலவின தொகையில் 1% செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டுமானத்தின் மொத்த திட்ட மதிப்பிட்டில் 1% - னை (ரூ.1365000/-) "The Manual Workers General Welfare Fund, Union Bank of India, Chennai. Account No.530601010038239, IFSC No.UBIN0553069" என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தி அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1. மனுதாரருக்கு வரைபடம் - 1.

தலைவர்
[illegible]
[illegible]

பெறுதல்:

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின்,
வேலூர் கோட்டம்,
பிளாட் எண்:22,9-வது தெரு,
கோபாலாபுரம், களிங்குர்,
வேலூர் -632 006.

11/6/21

EXECUTIVE ENGINEER
TNSCB / Vellore Division

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம் வேப்பனப்பள்ளி.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate